அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

- Page - 377 -

மலர் 2 இதழ் 10	விக்ருதி ௵ தை மீ ஜனவரி—பிப்ரவரி—1951 ௵	விலை அணு 2½

Acc. No. 18580.



தேவர்களின் ஏவுதலால் அக்நிதேவன் ஆறுமுகப் பெருமானின் தேரின் மீது கோழிக் கொடியாய் அமர்ந்தான்

(காந்தபுராணச் சித்திர விளக்கம்—20)

பொருளடக்கம்

			பக்கம்
1.	பார்வைக்காரன்	(திருப்புகழ்மணி)	... 1
2.	நாம சங்கீர்த்தனத்தின் நோக்கம்	(N. S. இராமச்சந்திர ஐயர்)	... 3
3.	திருத்தணி யாத்திரை		... 7
4.	பிறந்த நாள்	(கு. நடேச கவுண்டர்)	... 10
5.	ஆறுமுகமான பொருள்-2	(திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.,)	... 15
6.	திருக்கழுக்குன்றத்தின் மாட்சி	(இளவழகனுர்)	... 23
7.	பழநியாண்டவர் மயில்விடுதூது	(T. A. விவேகானந்தம் பிள்ளை, B.A., B.T.)	... 26
8.	கந்தர் கலி வெண்பா	(ரசபதி)	... 30
9.	The Find	(Thiruppugal Mani)	... 38

'அமிர்தவசனி' சந்தா அறிக்கை

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருட சந்தா ரூ. 1-8-0 யும் மணி ஆர்டர் மூலம் அல்லது நேரில் செலுத்தவும். நான்கு வருடச் சந்தா ரூ. 5-8-0 ஆயுள் சந்தா ரூ. 25-0-0. அயல் நாடுகளுக்கு வருடச் சந்தா ரூ. 2-0-0 அனுப்பவும். (வி. பி. இல்லை)

இவ்விரண்டாவது வருட சந்தா வருகிற பங்குனி மாதத்துடன் முடிந்துபோகிறபடியால், சித்திரை முதல் தொடர்ந்து பத்திரிகையை விரும்புவோர்கள் பங்குனி மாதம் முடிவதற்குள் சந்தா தொகையைச் செலுத்தவும்

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை

Regd. Trademark "EVEREST" Telephone 2305

P. R. NATHAM & CO.,

High Class Stationers, Importers of Drawing Materials, Artists' Colours and Chinese Crackers

No. 2/285, NETAJI SUBHAS CHANDRA BOSE ROAD, MADRAS—1

Sole Distributors of :—**EVEREST BRAND STATIONERY & CARBON PAPERS**

அமிர்தவசனி
தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

"எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே-
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

மலர் 2	விக்ருதி ௵ தை மீ ஜனவரி—பிப்ரவரி 1951	இதழ் 10

பார்வைக்காரன்

(திருப்புகழ் மணி)

"ஆணவவ முக்கடையு மாவியை விளக்கியறு
பூதியடை வித்ததொரு பார்வைக்காரனும்"

என்பது வேளைக்காரன் வகுப்பு. தாயின் பார்வையால் சேய் வளரும். அநுகூலப்பார்வையாலே உலகத்தை ரக்ஷிக்கிறபடியால் ஜகன்மாதா மீனாட்சி என்று ஓர் பெயரும் பெற்றாள். சேயாம் முருகன் பார்வைதாய் தந்தையர்களாகிய பார்வதி பரமேஸ்வரன் இவர்கள் உள்ளத்தை ஆனந்தத்தில் மூழ்கிவிடுகின்றதாம். இதையுணர்ந்த முனிவர்களும் சித்தர்களும் எப்போதும் முருகன் பார்வையை நாடியே நிற்பராம். கவிகுஞ்சர பாரதியார் போற்றுவார்.

உருகுமுரிமை காட்டிய முருகனெனவு நாக்கோடு
உனது கழல்கள் போற்றிட அருள் தாராய்

"தரணிதனில் ஆறுபத்து அறுகோடி தீர்த்தமும்
சரவணத்துள்ளடக்கம்—சாற்றுமோர்
எழுகோடி மந்திரமும் உன் சடாக்ஷரத்துள்
அடக்கம், விரதமிரு நவகோடி சித்தர்களும்
உன் சுபவீக்ஷணத்துள் அடக்கம்—
மேலான தேவாலயங்களும் உன் ஆறுபடை
வீட்டினுள் அடக்கம்—இரவிமுதல்
முப்பத்து முக்கோடி தேவர்களும் உன்
இருதயகமலத்தினுள் அடக்கம்—
ஈரேழுபுவனமும் அண்டங்கள் பலவும்
உன்னிடத்திலடக்கம் ஐயா"

என்று பாடினார். வேகங்களெல்லாம் அடங்குமிடம் முருகனாதலால், முருகன் பார்வையால் எதுதான் அடங்காது. ஆணவம் அடங்கிவிடும்; ஐம்பொறிகளும் அடங்கிவிடும்; அதுமாத்திரமா? அநுபூதி நிறைந்துவிடும்; முருகன் பார்வை யொன்றுமாத்திரம் பெற்றுவிட்டால்.

முருகனைக் கூவி அழைத்தால் உள்ளத்தில் வந்துவிடுவான், அவன் நாமத்தில் நீ ஆட ஆரம்பித்துவிட்டால், உன் உள்ளத்தில் அவன் ஆட ஆரம்பித்து விடுவான். சித்தர் வாக்கியப்பிரகாரம், 'அத்தனுடல் கண்டபோது, (ஐம்பொறிகளும்) அடங்கியாட்டுற்றதே.' அகத்தில் அடக்கம் ஏற்பட்டால் உளத்தில் முருகன் பொலிவு கிளரும்.

சிவன் தன் பார்வையாலே மன்மதனையழித்தான். அந்தத் தழல் பார்வையன்றளித்த கண்ணே, உலகுக்கெல்லாம் அருள்பார்வை யீன்றிடும் பன்னிரு

பத்ம பதத்தினில் வைத்தருள் துய்த்திரை
பட்ட தேனக்கினி யமையாதோ.

கண்ணனை ஈன்றது. அவன் பார்வையை நாம் பார்த்துவிட்டால் கண்ணனுடன் கண்கலந்த கலவியெ வீடேனும் பெறலாம். கண்ணனே முருகன் கண் ணழகைப்பார்த்து வியந்தானும்.

"செஞ்சிறியகால் விசாலத்தோகை துங்க
அநுகூல பார்வைத்தீர செம்பொன் மயில்
மீதிலேயேப்பொது—வருவாயே"

என்று அருணகிரி பார்வைக்கு ஏங்குகின்றார். தொண்டர்களையெல்லாம் முருகனைப் பாவிக்கும் மேன்மக்களுக்கு முருகன் சுப பார்வைக்குக் குறை வில்லை. தொண்டர் பார்வை குளிர்ந்த பார்வையாம்.

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை கரையிலா
கருணைமாகடலை மற்றவர் அறியா மாணிக்கமலையை
மதிப்பவர் மன மணிவிளக்கை, செற்றவர் புரங்கள்
செற்ற வெஞ்சிவனை கண்டுகண்டு உள்ளம்
குளிர என் கண்கள் குளிர்ந்தனவே"

தேவாரத்தில் 'சிராப்பள்ளிக்குன்றுடையானைக்கூற என் உள்ளம் குளிர்ந்தனவே' என்று பாடியுள்ளார். முருகன் பார்வை தொண்டர்தம் பார்வை. அன்ன வர்தம் குளிர்ந்த கண்பார்வை இவ்வுலகை ரக்ஷிக்கவே.

நாம ஸங்கீர்த்தனத்தின் நோக்கம்

(N. S. இராமச்சந்திர ஐயர், ஆனைமலை ரோட்)

மனித வாழ்க்கையின் உயரிய குறிக்கோள் பெரு நெறி பிடித்தொழுகி, இறையவன் அருள் பெற்று, அவ னோடு ஒன்றியிருத்தலாகும். இந்நோக்கத்தைக் கைகூட்டு-

---

பத்தியுடனுருகி நித்தமுனதடிகள்
பற்றுமருள் தருவாயே.

விக்கும் மார்க்கங்களில் இக்கலியுகத்திற்கு ஏற்றது கடவுளின் நாம ஸங்கீர்த்தனம் என்பதனை பற்பல பெரியார்கள் போதித்து வந்துள்ளனர்.

நம் தென்னாட்டில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தை அலங்கரித்திருந்த 57-ஆவது ஜகத்குருவாகிய ஸ்ரீமத் போதேந்திரரும், 58-ஆவது ஆசார்யராக வீற்றிருந்த ஸ்ரீமத் அத்வயாத்மப் பிரகாச ஸ்வாமிகளின் சிடராகிய ஸ்ரீதர வேங்கடேசார்யர் என்ற பெயரையுடைய அய்யாவாள் என்பவரும், மருதாநல்லூர் ஸத்குரு ஸ்வாமிகளும் பகவந்நாம பஜனத்தைப் பிரசாரத்தில் கொண்டுவரும் பொருட்டு உழைத்த மஹான்கள் ஆவர். வடஇந்தியாவில் ஸ்ரீ கிருஷ்ண சைதந்யரும், மேற்கில் ஸ்ரீ துகாராம் ஸ்வாமிகளும் நாம கீர்த்தன ஸம்பிரதாயத்தின் மூல காரணஸ்தர் ஆவார்கள்.

இம் மஹான்கள் அனைவரும் ஜீவகாருண்ய மேலீட்டினால் மனிதவர்க்கம் உய்யும் பொருட்டு ச்ருதி, ஸ்மிருதி, புராணம் முதலியவற்றுள் பரமானந்த சுகப்பிராப்திக்கு ஏதுவாகக் கூறப்பட்டுள்ள எத்தனையோ மார்க்கங்களில் மிகச்சுலபமானதும், செல்வத்தின் உதவியை நாடாததுமான நாம பஜனத்தை மிகவும் போற்றிப் புகழ்ந்தும்; தாங்களே ஆசரித்துக்காட்டியும், மாகாத்மியத்தைப் போதித்தும் வந்தார்கள்.

"நாஸ்தி நாஸ்தி மஹாபாக கலிகால ஸமம் யுகம்
ஸ்மரணாத் கீர்த்தனாத் தேவ ப்ராப்னோதி பரமாங்கதிம்".

கலியுகத்திற்கு நிகரான யுகம் இல்லவே இல்லை. ஏனென்றால் ஸ்மரணத்தினாலும் கீர்த்தனத்தினாலும் ஜீவன் முக்தி

ஆகத்துளே மகிழ்ந்த ஜோதிப்ரகாச இன்பம்
ஆலிக்குளே துலங்கி அருளாதோ.

யை அடைகிறான் என்பதனை அவர்கள் நிரந்தரம் மன்ப தைக்கு உபதேசித்து வந்தனர்.

நாமத்திற்கும் நாமிக்கும் வித்தியாசம் கிடையாது. நாமத்தின் த்வனி உலகெங்கும் பரவும்இயல்பை புடையது. இந்தத் துவனியால் உலகத்திற்கு க்ஷேமத்தை விளைவிக்கும் விசேஷ சக்திகள் வெளிக்கிளம்பும். சாந்தமும், சமரஸமும் உலகில் எங்கணும் பரவும். மக்கள் வாழ்க்கை இனிது நடைபெறும்.

ஆகையால் நாமஸங்கீர்த்தனம் அனுதினமும் நிகழ வேண்டியது மிகவும் அவசியம். ஆனால் அதனை அனுஷ்டிப்பவர் மனத்தூய்மை வாய்ந்தவர்களாக இருக்கவேண்டும். நான் என்னும் அகந்தையை முற்றிலும் நீக்கும் முயற்சியில் அவர்கள் ஈடுபடுதல் வேண்டும். மனமொழி மெய்களாகிய முக்கரணமும் சுத்தப்படுவது நான் என்ற அகங்காரம் நசிக்கும் போதுதான்.

பஜனை மடங்களில் திவ்ய நாமம் நடைபெறும் போது உச்சஸ்வரத்தில்பாடவும், ஆடவும், அபிநயங்கள் காண்பிக்கவும் செய்கின்ற அநேகரை நான் பார்த்திருக்கிறேன். அப்பொழுதெல்லாம் அவர்களின் காலடிகளில் விழுந்து பணிய வேண்டுமென்ற அவா என் மனத்தில் பிறந்ததுண்டு. மனதினால் என் வணக்கத்தை அன்னாருக்குச் செலுத்தியதுமுண்டு. ஆனால் அப்படிப்பட்டவர்களில் சிலர் உலக விவகாரங்களில் ஈடுபடும்போது பிறரைக்குறை கூறுவதும் தங்களையே புகழ்ந்து கொள்வதும், கூசாமல் ஆபாஸமொழிகளைக் கூறுவதும் செய்வதையும் பார்த்திருக்கிறேன். இது பஜனையில் ஈடுபடுவோர்க்குத் தகாதது. நாமபஜனத்தின்

கொடியனேனை யோதாதகு நல்லேனை நாடாத்
குருடனேனை நீயாள்வ தொருநாளே•

நோக்கத்தை மறந்து விடுவதால்தான் இத்தகைய சீர்கேடான நெறியைப் பின்பற்றுகிறார்கள்

பக்திச் செல்வத்தை விரும்பும் ஒருவர் தமது ஒழுக்க முறைகளைக்குறித்து மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். அவர்கள் முதலில் நாவை அடக்கிப் பழகவேண்டும், பிறர் பாடும்போது சுருதி சேரவில்லை, தாளம் பிழை. இராகம் சரியாயில்லை, சாரீரமில்லை, பாவம் ஸ்புரிக்கவில்லை என்ற இன்னோரன்ன குறைகளை எடுத்துக் கூறுவதில் கண்ணும் கருத்துமாய் இருத்தல் கூடாது. பாடுவோரின் உள்ளக்கிடக்கை எவ்வாறோ அவ்வாறே ஈசன் அவர்கட்கு அருள்புரிவான். நமக்கு அதனால் ஆகவேண்டியது ஒன்றுமில்லை. நம் மனத்தூய்மையை நாம் காத்துவந்தால் போதுமானது.

இன்னும் கோஷ்டி பஜனைகளில் ஈடுபடுவோர்களில் சிலர் தங்களைப் போல பஜனை பத்ததிகள் நன்குணர்ந்தவர்கள் வேறெவரும் கிடையாதென்ற ஆணவத்தைக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் நடத்திவரும் பத்ததியை விட்டு வேறு எந்தப் பாடலையாவது பாட இன்னொருவர் முன்வந்தால் அவர்கள் அதனில் இரஸிக்க மாட்டார்கள். கோவிந்த நாம ஸங்கீர்த்தனம் போட்டுவிட்டுத் தாங்களே பாடத்துவங்குவார்கள். பகவந்நாமாக்களடங்கிய எந்தப் பாட்டைப் பாடினாலும் அது ஈசனுக்குப் ப்ரீதியை யளிக்கும் என்பதை மறந்து விடுகிறார்கள். இதனால் பத்ததி வேண்டியதில்லை என்பது என் கருத்தல்ல. பத்ததியை அனுசரிக்கச் சில கட்டங்கள் இருக்கின்றன. அந்தந்த அவசரங்களில் அதனைப் பின்பற்றுதல் சீரிய முறையாகும்.

விரைவான தோகை துங்க மயிலேறி யோடி வந்து
வெகுமான விதேந்து அருள்வாயே.

இன்னும் சிலர் தாங்கள் பார்க்கப் போயிருந்த வேறோர் பஜனை கோஷ்டியில் தங்களை யாருமே பாடும் படிக் கேட்டுக் கொள்ளவில்லையென்று மனத்தாபம் அடைகின்றனர். இதனாலும் என்ன கேர்ந்துவிடும்? சிரவணத்தின் பயனில்லையா? பகவந்நாமத்தைக் கேட்கும் போது இன்ப மேற்படாதா? உண்மை பக்தனுக்கு நாம த்வனியே பிரதானம்.

பஜனைசெய்பவர் இத்தகைய கீழான எண்ணங்களை தங்கள் மனதின்கண் புகவிடுதல் நன்மை பயக்காது. தாங்கள் பாடுவதனாலும், பிறர் பாடுவதைக் கேட்பதனாலும் பகவந் நாமத்தில் மனதைச் செலுத்தி மனமொழி மெய்த்தூய்மையை வளர்த்திவரவேண்டும். நான் என்ற அகங்காரத்தை அழிப்பதுவே நாம ஸங்கீர்த்தனத்தின் பிரதான நோக்கமென்பதை மறவாதிருக்க வேண்டும்.

உண்மையன்பு உலகேல்லாம் பரவுக.

ஓம் த த் ஸ த் ஸ்ரீகுமாரார்ப் பணமஸ்து.

திருத்தணி யாத்திரை

சென்ற ஒரு வருஷமாக, சென்னை மல்லீஸ்வரர் கோவிலில் தொண்டர் கூட்டத்திலும் மற்ற அன்பர் சங்கங்களிலும் வெள்ளமெடுத்துத் தேக்கமுற்ற பக்திப் பெருக்கு திருப்புகழ் தொடர் எனும் ஆற்றின் வழியே திருத்தணியை யடைந்து முருகன் வீற்றிருக்கும் அப்பூர்ண மலையை ஓர் தாக்காகத் தாக்கியது. 1950-ம் வருஷம் டிசம்பர் மீ 31 உ யில் நடந்த சம்பவமிது. திருச்செங்

உபா கருணை புரியுமின்பக் கடல் மூழ்கி
உனையெனது சரிய பன்மைத் தருவாயே.

தூர், வள்ளிமலை, வேலூர், மைசூர் மற்றும் பல இடங்களின் பெருக்குகளும் கலந்து கொண்டன. முருகன் அன்பர் ஷசன்யம் திருத்தணி திருப்பதிமேல் படை யெடுத்துச் சென்றபோது தூள் பறந்து ஆகாயத்தை அளாவியது. தொண்டர் பாத தூளிக்கு ஆசைப்பட்ட மேன்மக்கள் பேரானந்த அந்த தூளி சமுத்திரத்தில் ஸ்நானமே செய் தார்கள். தேவேந்திரன் மேகங்களால் ஆதித்தன் தாபத்தை அகற்றி விண்ணில் பந்தரிட்டு பன்னீர் துளிகளைத் தெளித்து நின்றான். மஹாவிஷ்ணு வைகுண்டத்திலிருந்து அருள் பொழிந்து நின்றார்போலும். கஜேந்திரன் தலைவணங்கி முன்செல்ல, ரிஷபங்களால் இழுக்கப்பட்ட ஒலிப்பெருக்கி கள் திருப்புகழ் சப்தத்தால் அத்திருப்பதியை மூழ்க்கி விட்டது. இடிபோல் முழக்கி முருகன் வெற்றியை "ஜே முருகா, ஜே, ஜே, முருகா" வென்று நாற்றிசையும் கொந்தளித்துப்பாடும் தொண்டர்கள் இசையைக் கேட்டு குரங்குகளெல்லாம் மரத்தின் உச்சாணிக்கிளைகளினின்று வியந்து, பயந்து, கீழ்நோக்கி அசைவற்றிருந்தன. அடி மேல் அடிவைத்து அடிக்கோர் நாமம்பாடி அம்மாபெருங் கூட்டம் சரவணப் பொய்கையை நாடி நகர்ந்து சென்றது. வள்ளலார் அடியார்கள் இடையில் ஜோதியும் கருணையும் உலவும் உள்ளக் கனிவை நயந்தனர். ஒரே கற்பூர கோலா கலம், திருமயிலை, வடபழநி அருணகிரிநாதர் திருப்புகழ் பக்த சபைகள் முதலிய பக்தர்களும் நிறைந்து ஒரே ஆக்க மாகக் கூடிவிட்டார்கள். சுமார் 11 மணிக்கு ஆரம்பித்த கூட்டம் சுமார் 2 மணிக்கு அவர்கள் தங்குமிடத்தைச் சேர்ந்தார்கள்.

வளமொடு செந்தமிழ் உரைசெய அன்பரு
மகிழ வரங்களும் அருள்வாயே.

செவ்வாய்ப்பேட்டைக்கருகே ஒரு மணிக்கு மேல் அசைவற்று தொடர் வண்டி நிற்கவேண்டியதாயிற்று. பக்தர்களின் பஜனை ஒரு மணி ஜாஸ்தியாக நடத்த உதவியது. நின்ற இடத்தில் மாடு மேய்த்து நின்ற இடையரும் அவர் மக்கள் அவர்களும் முருகன் திருநாமம் சொல்லி திருநீறும் இடப்பெற்றார்கள். கெட்ட வேலையெல்லாம் **திருத்தணி வேலைக்காரன்** நல்ல வேலையாகவே ஆக்கிவிட்டான். **ஸ்ரீ இளவழகனார்** சொலற்கரிய தமிழில் திருத்தணி மகிமையை, திருப்புகழ்மணி இயற்றிய தாய் தந்த செல்வத்தின் வார்த்தைகளைப் போற்றியும், மேற்கோள்களுடனும் அற்புதமான **முல்லைக்கோடி** என்ற அவர் தம் பத்திரிகையில் பிரசுரப் படுத்தினார்கள். இவரைப் போன்ற மேன்மக்கள் முருகன் அருளில் நீடூழி வாழ்க. பண்ணும் பாடலும், இசையும் பொருளும், உகுக்கும் விழிநீரும், நெகுழும் உள்ளமும், சிலிர்த்த காயமும், நடித்தலயமும், விண்ணளாவி நின்ற முருகன் நாமவொலியும், மூலையும் முடுக்கும்கூட அகலாது எங்கும் கலந்த ஆனந்த உணர்ச்சியாய் நிறைந்து பூரணித்தது. அன்பர்களுக்கு வரிசை வரிசையாய்ப் பல இடங்களிலும் உணவு வழங்கப் பெற்றது. செவ்வானங்கண்ட அன்பர்கள் புகழ்பாடி, படியேறத் தொடங்கினர். உடன் வாழவந்த முருகனும் ஒளி வந்து திருவூரெல்லாம் ஒளி யூராக்கி விட்டான் போலும். மண்டபங்களில் எல்லாம் எண்ணிறந்த கூட்டங்கள் திருப்புகழ் பாடியே நின்றனர். கற்பூர கோலாகலமயமாயும், அன்னமிடும் கருணை மயமாயும் நிரம்பியது. ஓங்காரம் ஒளிர்ந்தது, கோபுரத்தில். படிகளை வணங்கி, அன்பர்கள் மலையேறி,

---

தாவினைகள் உற்று மேவிய பதத்தில்
வாழ்வொடு சிறக்க அருள்வாயே.

அனுபூதி பெற்றுத் திருப்புகழ் வெற்றியின் உருவங்களாய் விளங்கினர். முருகதாஸ், திருப்புகழ்மணி, க்ருபானந்த வாரி மற்றும் பலர் ஆங்காங்கே பேசினார்கள். முருக மயமாய், ஆனந்த வெள்ளத்திலும், கூடும் அன்பினிலும் விடேயினைய பெருவாழ்வு பெற்று அன்பர்கள் முருகா வென்று அமர்ந்தனர். சூரியோதய முருகன் செவ்வானத் திலும் அடியார் உள்ளத்திலும் இடங்கொள்ள, தொண்டர் கூட்டம் அடியார்களுடன் திரும்பப் பெற்றார்கள். அவர் கள் உருவம் திருத்தணி போனபோது மானிட உருவ மாய் கருதப்பட்டாலும், திரும்புங்காலையில் தேவர்களானார் கள் என்றே சொல்லலாம். அடியார்கள் வாழ்க. **முருகன் வாழ்க. உலகம் வாழ்க.** இந்தப் பேரானந்த யாத்திரை யையும் அனுபவத்தையும் செவ்வனே யாரும் அடையும் வண்ணம் உதவி செய்த மக்களும் எம். எஸ். எம் ரெயில்வே உத்தியோகஸ்தர்களும் மற்றும் யாவரும் முருகன் அருள் பெற்று நன்கு நிலைபெற்று அன்பு வாழ் வில் சுகிப்பார்களாக.

பிறந்த நாள்

(கு. நடேசகவுண்டர்)

மனிதரிற் பலர் தத்தம் பிறந்தநாளைக் கொண்டாடி மகிழும் வழக்கம் பெரும்பான்மையான நாடுகளில் உண்டு. தத்தம் நாள்களையே யன்றிப் பெரியோர்களின் பிறந்தநாள் களையும் கொண்டாடுகின்றோம். கிருஷ்ண ஜயந்தி முதல் காந்தி ஜயந்தி யீறாக எத்தனையோ ஜயந்திகள் நம் நாட்டில் கொண்டாடப் படுகின்றன. பிள்ளையார் சதுர்த்தி,

---

காலமுமுணர்ந்து ஞானவெளி கண்கள்
காண அருள் என்று பெறுவேனே.

வைகாசி விசாகம் முதலிய திருநாட்கள் தெய்வங்களின் பிறந்தநாளெனக் கொண்டாடப் படுகின்றன. சுதந்தர ஜயந்தியும் கூட சில ஆண்டுகளாக நடைபெறுகிறது.

அடிமைத் தளையினின்று நீங்கிய மகிழ்ச்சியால் ஆகஸ்டுமாதம் 15-ஆம் தேதியைச் சுதந்தர ஜயந்தியாகக் கொண்டாடுகிறோம். தெய்வங்களின் அவதார நாட்களையும், பெரியோர்களின் அவதாரநாட்களையும் அவர்கள் தோன்றி உலகத்திற்குச் செய்த பேருதவியை நினைத்து நன்றியறித லாகக் கொண்டாடுகின்றோம். அவர்களைப்பற்றி நினைப்ப தால் நம் மனமாசு ஒரு சிறிதேனும் நம்மைவிட்டு அகலு கின்றது. அறத்திலும ஆண்மையிலும் பற்றும் ஊக்கமும் அகத்தில் தோன்றுகின்றன. ஆனால் "நாம் பிறந்த நாளைக் கொண்டாடுகின்றதால் நமக்கு என்ன பயன்?" என்று ஒவ்வொருவரும் எண்ணிப் பார்த்தல் வேண்டும். அப்படிப் பார்த்தால், தாம் பிறந்ததனால் தமக்கேனும் உலகத்துக் கேனும் இன்ன நன்மை விளைந்தது என நெஞ்சாற நினைக் கத் தக்கவர்கள் எத்தனைபேர்?

எனக்குத் தெரிந்த துறவி ஒருவரை யாரேனும் "சுவா மிகள் எந்த வூர்?" என்றால் "கருவூர்; பேரூருக்குப் போக வந்தேன்" என்பார். அப்பெரியாரது பிறந்த ஊரும், தாய் தந்தையார் அவருக்கு வைத்த பெயரும் எனக்கே னும் அவருடன் பழகிய வேறு யாருக்கேனும் இன்னும் தெரியா. ஆனால் அவர் கருவூரிலிருந்து வந்தவர் என்பது மெய்தானே! எல்லாரும் கருவூரிலிருந்து வந்தவர்கள்தான். அவர் பேரூருக்குப் போய்விட்டார். இருக்கும்வரையில் அவ்வூரையே நோக்கிச் சென்றுகொண்டிருந்தார். ஆனால்

ஒருகால் முருகா பரமா குமரா
உயிர்கா வெனவோ தருள் தாராய்

னையபேரோ 'நாம் எங்கே போகவேண்டும்' என்பதை நினையாமலே திரிகின்றனர். இவ்வாறு திரிவதுதான் குறிக்கோள் இலாத வாழ்க்கை எனப்படும். இத்தகைய வாழ்க்கையோர் மீண்டும் மீண்டும் கருவூருக்கே திரும்பச் செல்கின்றனர். கருவூர் எது என்பது தெரிந்திருக்கலாமே? பிறப்பே அவ்வூர். பேரூராகிய வீடுபேற்றை அடைந்தவன் மீண்டும் கருவூருக்கு வரமாட்டான்.

கருவூரிலே— தாய்வயிற்றிலே—சிறைப்பட்டிருக்கும் போது, ஒவ்வோருயிரும்

"யோனியை விட்டு வெளிவருவேனாயின், பரமேசுவரனும்
பர்க்கனும், பசுபதியும், உருத்திரனும், சகத்குருவு
மான மகாதேவனைச் சரணமாக அடைவேன்"

என்று கர்ப்போபநிஷதம் கூறுவதுபோல், இனி இங்கே வராமல் பேரூரையே அடைவேன் என்று நினைக்குமாம். ஆனால் கருவூரை விட்டு வெளியே வந்தவுடன் வழிமறந்து சுழல்வதையே காண்கிறோம். ஏதோ ஒரு சிலரே பேரூருக்குச் செல்லும் குறிக்கோள் உடையராய் உலகில் வழி நடக்கின்றனர்,

"கருவாய்க் கிடந்து உன் கழலே நினையும் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய்ப் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் பரகதி நீ பாதிரிப் புலியூரானே"

எனவும்

"பாலனாய்க் கழிந்த நாளும், பனிமலர்க் கோதைமார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும், மெலிவொடு மூப்புவந்து
கோலனாய்க் கழிந்த நாளும் குறிக்கோள் இலாது கெட்டேன்
சேலுலாம் பழன வேலித் திருக்கொண்டீச் சரத்துளானே"

எனவும் திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியதையும் இங்கே நினைவுக்கு வருகின்றது.

அறிய அறிய அறியாத அடிகள் அறிய அடியேனும்
அறிவுள் அறியும் அறிவூற அருள்வாயே.

குறிக்கோள் இலாதவர் வழிநடப்பதால் யாது பயன்? எங்கே போகவேண்டும் என்பதே தெரியாமல் ஓடுகின்றவனை என்ன என்று மதிப்பது!

குறிக்கோள் இன்னது என்று உணர்ந்து அதனை அடைய வேண்டும் என்று—கருவூரை விட்டுப் புறப்பட்டவன் பேரூருக்கே போகவேண்டும் என்று உறுதிகொண்ட நாளே ஒருவர் பிறப்பினாலாய பயனை உணர்ந்து அதனை அடைய முயலும் நாளாகும். அந்த நாளேதான் பிறந்ததனால் பயன் அடைந்த நாளாகும், உண்மையாக ஒருவன் பிறந்த நாளாகும். அதுவே வாணாளாகும், மற்றையநாள் வீணாளேயாகும்.

அறுபது, எழுபது ஆண்டுகளான ஒரு கிழவரை ஒருவர் நோக்கி "உமக்கு வயது எத்தனை?" என்று கேட்க "ஐந்து வயதாயிற்று" என்றார் அக்கிழவர். அருகிலிருந்தார் அனைவரும் நகைத்தனர். கிழவரோ "ஏன் நகைக்கின்றீர்கள்; 'ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலமெல்லாம் பாழுக்கிறைத்தேன். பரம்பரனைப் பரவாதே' ஆதலால் அந்நாளெல்லாம் எனக்குப் "பிறவாநாளே" ஆயின. இறைவனது தொண்டில் நான் ஈடுபட்டு ஐந்து ஆண்டுகளே ஆயின. அவையே நான் பிறந்த நாட்கள் ஆதலால் நான் பிறந்த ஐந்து ஆண்டுகள்தான் ஆயின" என்றாராம்.

சைவசமயாசாரியக் கிழவரான அப்பரும்

"பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம்
பிறவா நாளே"

எனவும்,

கற்றவர் பயிலும் நாகைக் காரோணம் கருதி எத்தப்—
பெற்றவர் பிறந்தார் மற்றுப் பிறந்தவர் பிறந்திலாரே"

அடியவிரு வினைதீர படஅமர ரீதுபூசை
அதிசயமே வருன்பாட வரவேணும்.

எனவும் அருளிச் செய்திருத்தலையும் நாம் ஈண்டு கருத வேண்டும்.

ஒரு தலைவன், தன் காதலியோடு கலந்து வாழ்ந்த நாளே வாழ்நாளெனவும், ஏனைய நாள்கள் வீணாள் எனவும் கூறியதாக

"எல்லாம் எவனோ பதடிவைகல்,
அரிவை தோளணைத் துஞ்சிக்
கழிந்த நாளிவன் வாழுநாளே"

எனக்குறுந்தொகைப் பாட்டொன்று கூறுகிறது. அது காமுகன் பேச்சு. இறைவன் பால் காதல் கொண்டார் தன்மையும் ஒருவாறு அத்தன்மையது தானே!

இதுகாறும் கூறியவற்றால் ஒருவருக்கு உண்மையாகவே பிறந்தநாள் எது வெனில், இறைவன் திருவடியிற் பத்தி பிறந்தநாளே. அவனை நினைந்த நாளே. அவனை நினைந்த நாளே "வாழும் நாள்". நினையாது கழிந்த நாளே 'பதடிவைகள்' பிறவாதநாள்.

இதனை சுந்தரமூர்த்தி சுவாமிகள் மிக அழகாகக் கூறுகின்றார்.

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப் பாதமே
மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் (நமச்சிவாயப்பதிகம்)

'இறைவனே, வேறு பற்று ஒன்றும் இல்லாமல் உன் திருவடியை மனத்தில் சிந்திக்கின்றேன். அச்சிந்தனை பிறந்த உடனேயே நானும் உண்மையாகப் பிறந்தவனானேன்' என்பது இதன் பொருளாகும். எனவே இறைவன்பால் சிந்தனை பிறவாத நாளும் "பிறவாத நாள்" தானே.

தீப விளக்கங் காண எனக்குஞ்
சீதள பத்மந் தருவாயே.

"பிறவாத நாளைப்' பற்றியும் சுந்தரர் கூறுவதைப் பார்ப்போம்.

"ஓவுநாள் உணர்வழியும் நாள்; உயிர்போகும் நாள்
உயிர் பாடைமேல்,
சாவுநாள் இவை; என்ற(ல்)லால் கருதேன்
(நமச்சிவாயப் பதிகம்)

உன் நினைவு என்னை விட்டு நீங்கிய நாள் எதுவோ அது உணர்வழிந்த நாள், உயிர் போன நாள், உடல் பாடை மேல் போகும் நாள், சாவு நிகழ்ந்த நாள் என்று அந்நாளை இழித்துக் கூறுகின்றார்.

ஆதலால், அன்பர்களே! கருவூரை விட்டுப் புறப் பட்ட நாம் பேரூர் போவதைக் குறிக்கோளாகக் கொள் வோம். அவ்வழியில் அடியிட்டு, மீதியுள்ள நாளைப் பிறந்த நாளாக்கிக் கொள்வோம். பாழ் நாளாகப் போகாமல் வாழ் நாளாக்கிக் கொள்வோம்.

" விடுமின் வெகுளி வேட்கை நோய்
மிகவோர் காலம் இனியில்லை;
உடையான் அடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோடு
உடன் போவதற்கே ஒருப்படுமின்;
அடைவோம் நாம் போய்ச் சிவபுரத்துள்
அணியார் கதவம் அடையாமே;
புடைபட்டு உருகிப் போற்றுவோம்
புயங்கன் ஆள்வான் புகழ்களையே.
(திருவாசகம் யாத்திரைப் பத்து)

ஆறுமுகமான பொருள்-2

(திருப்புகழ சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.)

ஆதார தெய்வம் ஆறுமுகனே—

இறைவனை வழிபடும் முறைகளில் நான்கு முறைகள் சிறந்தன என்பர். அவை சரியை, கிரியை, யோகம்,

---

கடஞுன தபய மடிமையபு ஸடிமை
கடுக்பு ஸடிகள் தகுவாபே

ஞானம் என்பன. இறைவனது ஆலயத்திற்கு வைகறையில் செல்லுதல், திருவலகிடல், திருமெழுக்கிடல், திருமாலை தொடுத்தல் முதலியன **சரியை** வழிபாடாகும். தக்க ஆசிரியர் மூலம் தீக்கை விதியுடன் பெற்ற உபதேசப்படி இறைவனை முறையாகத் திருமுழுக் காட்டி, உபசாரம் முதலியவற்றால் வழிபடல் **கிரியை** என்பர். இறைவனது திருவடியினையே மனமானது சென்று கூடும்படி எட்டு உறுப்புக் கொண்ட ரேசக பூரககும்பகாதி முறைப்படி செய்யும் வழிபாடு **யோகம்** (யோகம் - ஒன்றோடொன்று - மனமும் இறைவனும் - கூடுதல்) ஆகும். பல வேறு பிறவிகளில் மேற் சொன்ன சரியையாதி மூன்றும் முடித்த சிவ புண்ணியக் கூட்டுறவால் இறைவனே பரமாசாரியனாய் வந்து உணர்த்தப் பெறும் ஞானத்தால் வழிபடுவது **ஞான** மார்க்கம் என்பர்.

இவற்றில் மூன்றாவது யோகம். இதனை ஹடயோகம், சிவயோகம் எனப் பிரிக்கலாம். அடயோகம் செயற்கை முறையால் விழி நாசி வைத்து நாசிக்குள் பிராணவாயுவை ரேசித்து மூலாதாரத்திலிருந்து கபாலத்துக்கு நேராகத் தொடும்படி ஒட்டிக் கும்பித்தும் பூரித்தும் செய்யப் படுவது. இது ஓரளவு உடலுக்கு உறுதி தரும். நோய் நீக்கஞ் செய்யும். ஆனால் உயிர்க்கு உறுதி பயப்பது **சிவயோக** சாதனையே ஆகும். அச்சிவயோகமே தியான யோகமாகும். அது இறைவன் திருவருளநுபவமுடைய ஞான தேசிகர் உபதேசித்த திருவுருவை உள்ளக் கமலத்திலிருந்து கிழக்கு அல்லது வடக்கு நோக்கி பதுமாசனமான சுகாசனத்திருந்து ஒரு முகவுணர்வு உரம் பெற்ற

பத்தியை எனக்கருளி முத்தியை அளித்துவளர் பச்சைமயில் உற்று வரவேனும்.

தியானத்தால், ரேசக பூரககும்பகங்கள் ஏற்பட்டு மூலக் கனல் சுடர்விட குண்டலினியை மேலேற்றி முறையே ஆதாரங்களையும் அவற்றிலுள்ள அதிதேவதைகளையும் தரிசித்து நிராதார நிலையில் உச்சிக்குப் பன்னிரண்டு அங்குல உயரத்தில் (துவாதசாந்த வெளி) தரிசனஞ் செய்த பின், அங்குத் "தசநாதங்கேட்டு சோதி தரிசனம் செய்து அங்கிருந்து ஊற்றெடுக்கும் அமுத தாரைகள் உடலெங்கும் நாடி நரம்புகள் தோறும் பாயச் சுவைத்த நிலையில் சிவாத்துவிதம் பெறுவதே சிவயோக வழிபாடாகும். அவ்வழிபாடுடையார்தாம் இராப்பகலற்ற இடத்தில் தம்மை மறந்து அருளமுதந் தேக்கி விளங்கி இருப்பர். இதன் விரிவைத் திருமந்திரம், திருப்புகழ், கந்தரலங்காரம், திருவகுப்பு முதலிய நூல்களிற் காண்க.

(1) "காயமும் நாவும் நெஞ்சும் ஓர் வழியாக அன்பு
காணுதல் கூர்தவஞ் செய் யோகிகளாய்விளங்க-
அருள்வாயே"

(2) "அந்தகன் வருந்தினம் பிறகிட
சந்தத மூவந்துகண்டு அறிவையர்க்கு
அன்புருகு சங்கதம் தவிரமுக்—குணமாள
அந்தி பக லென்றிரண்டையு மொழித்து
இந்திரிய சஞ்சலங்களை யறுத்து
அம்புய பதங்களின் பெருமையைக் - கவிபாடிச்
செந்திலை உணர்ந்துணர்ந் துணர்வுறக்
கந்தனை அறிந்தறிந் தறிவினிற்
சென்று செருகுந் தடந் தெளிதரத் - தணியாத
சிந்தையுமவிழ்ந் தவிழ்ந் துரை ஒழித்து
என் செயலழிந் தழிந் தழிய மெய்ச
சிந்தை வர என்று நின் தெரிசனைப் - படுவேனோ

செந்தமிழ் நாளு மோதி உயந்திட ஞானமுற
செங்கனி வாயில் ஓர்சொல் அருள்வாயே.

8 அராப்புனே வேணியன் சேயருள் வேண்டு அவிழ்ந்த அன்பால்
குராப்புனை தடையந்தாள் தொழல் வேண்டுங் கொடிய ஐவர்
பராக்கரல் வேண்டும் மனமும் பதைப்பறல் வேண்டுமென்றல்
இராப்பகலற்ற இடத்தே இருக்கை எளிதல்லவே"

(அருணகிரியார்)

இன்னும் பலவுள. வல்லார் வாய்க்கேட்டுணர்க.

இவ்வித யோக நிலையில் தரிசனமாகும் ஆதாரங்கள் ஆறு. அவை மூலாதார முதல் ஆக்ஞை ஈறாக ஆறாகும். இவைகளின் அதிதேவதைகள் வருமாறு:—

மூலாதாரம் —	(குதம்) —	கணபதி
சுவாதிஷ்டானம்—	(அடிவயிறு)—	பிரமன்
மணி பூரகம் —	நாபி —	திருமால்
அநாகதம் —	இருதயம் —	உருத்திரன்
விசுக்தி —	கண்டம் —	மகேசன்
ஆக்ஞை —	புருவமத்தி —	சதாசிவம்

இவ்வித ஆறு ஆதாரங்கட்குரிய தெய்வங்களும் அப்பாற் பட்டவனும் தானே என்று காட்டவே முருகன் **ஆறு முகனுக்**க் காட்சி தருகின்றான். இவ்வாதார வழிபாட்டைப் பாம்பனடிகளது ஸ்ரீமத் குமாரசுவாமியமும், திருப்பா என்ற நூலும் விரிவாய்க் கூறும்.

"நீடார் **ஷடாதரத்தின்** மீதே பராபரத்தை
நீ காண் என அனைச்சொல் - அருள்வாயே"

(திருப்புகழ்)

"தந்திமுகனோடு மற்றைந்து பெயர் நீர்மையும்
தன்னகத் துள தெய்வமே"

(பாம்பனடிகள்)

அமலே அடியவர் கொடிய வினைகொடு
அபயம் இடுகுரல் அறியாயோ

ஆறுபடை வீட்டதிபன் ஆறுமுகனே

*அகமுக அநுபவிகட்குக் காட்சியாகும் ஆறு ஆதாரங்கள் புற முகத்தில் ஆறு படை வீடுகள் எனப் பெயர் கொள்ளும். இவைகள் திருமுருகாற்(ற்)றுப் படையிலுள்ளவாறே கூறப்படவின் **படை வீடுகள்** எனப்பட்டன என்பர் தணிகை மணி. படைகளைக் காப்புக்காகக் கோவிலில் வைப்பது பழங்கால வழக்கு; (சமீபத்தில் நடந்த இரண்டாம் உலகப் போரின் போது பல ஆலயங்கள் பதுங்குமிடங்களாகப் (Shelter) பயன்பட்டது காண்க. அதனுல் **படை வீடுகள்** என்ற பெயர் வந்தது என்பர் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள்.) படை - படுவது- தொடுவது. பிராணவாயு தொடும் - படுகிற - ஆதாரங்கள் படை வீடுகள் என்பாருமுளர். எவ்வாருயினும் ஆறு படை வீடுகள் திருப்புகழில் **'ஆறு திருப்பதிகள்'** எனப் பேசப் பெறுகின்றன. அவைகள் (1) திருப்பரங்குன்றம் (2)திருச்சீரலைவாய் (3) திருவாவினன்குடி (4) திருவேரகம் (5) குன்றுதோருடல் (6) பழமுதிர்சோலை எனப்படும். இவ்வாறு தலங்களிலும் முருகன் ஆறு வேருன வடிவங் கொண்டு காட்சி வழங்குகிருன்.*

(1) **திருப்பரங்குன்றம்:—** *இங்கு முருகன் தேவசேனையை மணந்துள்ள கோலததுடன் எழுந்தருளியுள்ளான். இது போக கோலம்.*

(2) **திருச் சீரலைவாய்:—** *(செந்தில்-செந்தூர்) சூரனிடம் வீரபாகுவைத், தூது விட்டு வீரனைக் காட்சி யளிக்கிருன். இங்குள்ளவனது ஆண்மை அருணகிரியாரைப் பிணிக்கிறது. ஆணவத்தை அழிக்க நிற்கும் வீர*

அறிவாகமும் பெறுக இடரான துந்தோலைய
அருள் ஞான இன்பமது புரிவாயே

கோலத்தை வியந்து "செந்திநகர் வாழும் ஆண்மைக் காா" என்று கல்லுங்கரையக் கவிபாடிக் களிக்கிறார். இங்குள்ள தெய்வம் வீரசோலத்துடன் வீற்றிருப்பதாகும்.

(3) பழநித்திருவாவினன் குடி:— திருமுருகாற்றுப் படையின் படி திருவாவினன் குடி மூன்றும் படை வீடாகும். அது தாழக் கோவில். மலை மேலுள்ளது பழநிக் கோவில். திருப்புகழில் "பழநித் திருவாவினன் குடி அதனிற் குடியாய்" என்பதால் இரண்டும் கூட்டியே உரைக்கலாம் போலும். இங்கு முருகபிரான் "ஞானப் பழமாய்", "ஞானபண்டித சுவாமியாய்" "ஞானதண்டாயுதபாணியாக" விளங்கலின் ஞானமூர்த்தியாக அருள் காட்சி தருகிறான். சித்தன் வாழ்வு என்று பழநிக்குப் பழம் பெயராகலின் சித்த மூர்த்தியாய் போகர் புலிப் பாணி முதலிய சித்தர் தலைவராய் விளங்குகின்றான் என்னனலும் பொருந்துவதே.

திருவேரகம்:— சுவாமிமலை:—

"காவேரி நேர் வடக்கிலே வாவி பூ மணத்த
காவார் சுவாமி வெற்பு"

இங்கு முருகவேள் கமண்டலம் அக்கமணி மாலை முதலிய தாங்கி யோக மூர்த்தியாயும் ஆசாரிய கோலத்துடனும் விளங்குகிறார்.

"வன்னமயில் வாகன பொன் ஏரகப்பதியில்
வளர் சாமிநாத குருவே" என்றார் பிறரும்.

(5) குன்றுதோறாடல்:— இது ஓர் மலை நாட்டுத் திருப்பதி என்பர் உச்சி மேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர். ஆனால் அருணகிரியார் கருத்தின் படி இப்பெயர்

திருத்தணி, கொங்கணகிரி, கழுகுமலை முதலிய மலையுள்ள தலங்களனைத்தையும் குறிக்கும்.

"குறிஞ்சிக்கிழவனேன்றோதும் குவலயமே"

"பதியெங்கிலுமிருந்து - விளையாடி (கந்தரலங்காரம்)
பல குன்றிலுமமர்ந்த - பெருமாளே"

(திருப்புகழ்)

"குன்றவர் சாதி கூடி வெறியாடி
கும்பிட நாடி வாழ்வு தந்தவரோடும் வீறு
குன்று தோறாடல் மேவும் - பெருமாளே.
"பதிகள் பல ஆயிரங்கள், மலைகள் வெகு கோடி
நின்ற பதமடியர் காண வந்த கதிர் காமா"

(திருப்புகழ்)

"சேயோன் மேய, மைவரை உலகம் என்று ஒல்காப் பெரும் புகழ் தொல்காப்பியர் கூறுவதும் கருதத்தக்கது. உதாரணமாக, இப் படை வீட்டைச் சார்ந்த புலிக்குயிரா கும் திருத்தணிகையை நோக்குவோம். அங்குள்ள பெருமான் 'தாரை எட்டுடைய கூருடை நெடுவேல்' சல்லாடம் தாங்கி, வந்தோர் அனைவருக்கும் தத்துவ சேட்டையைத் தவிர்த்து, அமைதி பெறுகின்ற சாந்தி நிகேதனத்தில் எழுந்தருளியுள்ளான். சித்தவிர்த்தி தணிக்கு மலை 'தணி மலை' என்றாயிற்று. சிவனாரும் க்ஷண நேரம் சித்த மொழுக்கித் தவஞ்செய்த வரலாறு தணிகை புராணம் கூறும். அங்ஙனந் தணிந்து வந்தவரைத் தன்னிடம் சேர்த்துக் கொள்வதோடு அவர்கட்குப் பிறவிப் பிணி வாராது தடுக்கும் பவரோக வைத்திய நாதனது கோலம் சாந்த மூர்த்தம் அல்லது லய மூர்த்தம் ஆகும்

பயில் வரம் பெற்றுக் கச்சியில் நிற்கும் பெருமாளே
சிறு சதங்கைப் பொற்பதம மெனக்கென்று அருள்வாயே

(6) பழமுதிர் சோலை: இது 'சோலைமலை' எனவும் படும். இது கள்ளழகர் கோவில் என்ற அழகர் மலை என்பதே பழங் கொள்கை. பின் வந்தோர் இது வள்ளி மலை என்றுங் கூறுவர். அருணகிரியார் அழகர் மலையையே ஆறும் படை வீடாகக் கொண்டனர் என்பதற்குத் திருப்புகழ் ஆதரவு உள்ளது.

திருமாலிருஞ் சோலை என ஆழ்வார்கள் வழங்கியுள்ளமை 'சோலைமலை' என்ற பெயருக்கு அரண் செய்கிறது. இங்கு உள்ள 'நூபுரகங்கை' திருப்புகழிலும் கூறப்பட்டுள்ளது. இதில் அழகிய திருமால் போல அவரது முழுவதும் அழகிய மருகனாரும் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருந்திருக்கக் கூடுமன்றோ? இது 'பழமுதிர் சோலை மலைகிழவோனே' என்பதால் இங்கு ஆண்டவன் 'அப்படி பத்தி பழுத்த மனத்தினர் அர்ச்சனை மெச்சிய' அருட் கோலத்துடனிருப்பார்.

மேற்போந்தவற்றிலிருந்து ஆறு ஆதாரத் தெய்வம் தானே என்பதும், ஆறுபடை வீட்டு அதிபன் தானே என்பதும் ஆறு முகமான பொருள் என்க. அவன் ஆறு முகம் ஆறக்கரவுண்மையை அருள்வதை அடுத்த இதழில் காண்போம்.

"ஆறு திருப்பதி கண்டு ஆறெழுத்து மாண்பினுடன்
கூறுமவர் சிந்தை குடி கொண்டோனே"

(கந்தர் கலிவெண்பா)

"திருவாவினன் குடி பங்காளரெண்முது சீருரைச
திருவாவினன் குடி வானூர் பரங்குன்று சீரலைவாய்
திருவாவினன் குடி ஏரகம் குன்றுதொறுடல் சென்ற
திருவாவினன் குடி கொண்ட தண்கார் வரை செப்புமினே

(கந்தரந்தாதி)

உருவ மொன்றிலாத பருவம் வந்து சேர
உபயதுங்க பாதம் அருள்வாயே.

திருக்கழுக்குன்றத்தின் மாட்சி

(இளவழகனார்)

VIII வேத மலை

(தொடர்ச்சி 4-ஆம் பாகம்)

74. திருக்கழுக்குன்றம் 'வேதகிரி' என்று பெயர் பெறும்! வேதம் மலைவடிவாய்த் திகழும் அருமை அமைந்தது.

75. இதனால், மலைமேல் கால் வைக்க அஞ்சி, மலையை வலமாக வருதலொன்றே அங்கு வழிபாடெனக் கருது வாரும் உண்டு; மலைமேல் ஏறி இறங்குவாரும் அங்ஙனம் இறங்கியபின், மலையை வலம்வந்து வணங்கிக் கொள்ளுதல் திருக்கழுக்குன்றத்தின் தனிமரபாகும். வேதமலையாதலின், மலைக்கு அத்தகைய அன்பும் உருக்கமும் போற்றுதலும் இயல்பாகவே அன்பர்கள் உள்ளத்தில் எழுகின்றன.

76. வேதவடிவாய் இறைவன் விளங்குகின்றானாதலின், அவன் இவ்வேத மலைவடிவாகவும் திகழ்வோனாவன்; 'வேதகிரி' என்னும் மலையின் பெயரே அதிலுறையும் இறைவன் பெயராய் அமைந்துள்ளமை இவ்வுண்மையை உணர்த்தும்.

77. இறைவன் வேதவடிவாய்த் திகழ்தலேயன்றி, வேதத தின் உச்சியிலும் அதாவது வேத முடிவிலும் திகழ் வோனாவன்; ஆதலின், திருக்கழுக்குன்றத்தில் இறைவன் உச்சியில் உள்ளான்.

78. வேதத்தின் ஒவ்வொரு நிலையிலும் இறைவன் உளன் உளன் என்று எண்ணும்படி யிருந்து கடைசியில்

படிமிசை போவென் றேட்டி அடிமையை நீ வந்தேத்தி
பரகதி தானுங் காட்டி அருள்வாயே

வேத முடியில் உள்ளவன் போலத்தோன்றி அம்முடிவுக்கும் அப்பாற்பட்டவனாய் அவன் விளங்குகின்றான். இவ்வியல்புக்குத் திருக்கழுக்குன்றம் சிறந்த சான்றாய்த் திகழ்கின்றது. மலையிடத்தின் பல பகுதிகளில் இறைவன் திருவடையாளம் இருத்தலோடு, மலையுச்சிப் பாறைக்கும் அப்பால் அதன் மேலிடத்தில் அவன் திருக்கோவில் உயர்ந்தோங்கி விளங்குகின்றது.

79. வேதம் நான்கு கூறுமாய், மறைந்த பொருளுமாய் இருப்பதாகலின், அங்கே மலையும் நான்கு கூறாய், வலம்வரும்போது மலைப் பாதையின் சிற்சில இடங்களில் உச்சிக்கோவில் மறைந்து மறைந்த பொருளுமாய் நின்று மெய்ம்மை தெரிவிக்கும்.

80. மலை வேதவடிவம் என்பது திருக்கழுக்குன்றத்துக்கு மிகப் பொருத்தம். மலைத் தாழ்வரையே ஆகமங்கள் பெறும் இடமாக ஆன்றோரால் உரைக்கப்படும். 'கல்' என்பது மலையின் பெயர். செடி கொடிகளாகிய ஓரறிவு உயிர்முதல் பலதிற அறிவுகள் வாய்ந்த பல்வேறு உயிர்வகைகளும், நுண்வெளியும், உயரமும், தூய காற்றும், பரந்த உலகப்பார்வையும், வேற்றுமை தெரியாப் பொதுமைநிலையும், பிறவும் மலையின்கண் பெறப்படுதலின், மேன்மேலும் மனஉணர்வை நுட்பமாக்கிக் கொள்ளுதலாகிய ஓதற்கும் கேட்டற்கும் மலையிடம் ஏற்றதாயிற்று. ஓதத்தகுவது வேதமே என்பது, "வேதம் ஓதி வெண்ணூற் பூண்டு" என்னும் திருமறையால் அறியப்படும். "கற்றல், கேட்டல் உடையார் பெரியார்" என்னும் திருமுறையும்

எனதற நினது கழல் பெற மவுன
வெல்லை குறிப்பது ஒன்று புகல்வாயே.

நினைவு கூரப்படும். ஆகவே, ஓதுவாரும் கேட்பாரு மாக அமையுங் 'குருகுல' மென்னும் கல்லூரி பண்டை காலத்தில் மலையிடங்களில் அமைந்திருந்தமையும், கல் என்னும் மலையில் கல்விகற்கும் கல்லூரிகள் தோன்றித்திகழுஞ் சொற்பொருத்தமும் இங்கு கருதத்தக்கன. இவ்வாறு, நுண்மைகளைக் கற்றற்குரிய சிறந்த இடமாய் மலை அமைதலின், மலை வேதவடிவம் என்பது மிகவும் பொருந்தும். திருக்கழுக்குன்றம் 'வேதகிரி' எனப்பெயர் பெற்றமை அதன் சிறப்பைப் பல படியாலும் புலப்படுத்துகின்றது. வேதங்களைக் கலைகள் என்றும் கூறுதலுண்டு. பலகலைகள் அறிந்து கொள்ளுதற்கேற்ற மூலிகை முதலியன ஏனைய குன்று களினுந் திருக்கழுக்குன்றிற் சிறப்பாக உண்டு.

81. கற்றதனாலாய பயன் இறைவன் நற்றாள் தொழுதல் என்பர். வேதகிரியாதலின், அக் கிரியில் வேதம் பயிறலின் பயனாக இறைவன் நற்றாள் தொழும் பேறும் அங்கே இனிதமைந்துள்ளது. மலைவலம் வரும்போது பற்பல பாகங்களில் இறைகாட்சி அங் கங்குந் தோன்றும்படி இருப்பது, கற்றதனாலாய பெரும்பயனைப் பெறும்படி உள்ளது.

82. மலைக் கோவிலும், தாழக்கோவில் கோபுரங்கள் நான் கும் எல்லாம் ஒருங்கே தோன்றும் மலைப்பாரிசமும் ஓரிடத்தில் உண்டு. 'சஞ்சீவி' மலை என்னும் பகுதியில் இப்பெருங்காட்சி ஒருங்கே நன்கு தோன்றும்! மலைப் பயன் சஞ்சீவி மலைப்பகுதியில் மிக நன்றாகக் கிடைக் கும். அதாவது, வேதப்பயிற்சியும், 'பிராணயாமம்'

உமைதரு செல்வன் என மிகு கல்வி
உணர்வோடு சொல்ல உணராதோ.

முதலிய நுண்கலைப்பயிற்சிகளும் ஏனையோக நிறைவும், ஞானத்தெளிவும், இறை காட்சியும் என அனைத்தும் அங்கே ஒருங்கு கிடைக்கும்.

83. மணிவாசகப்பெருமானுக்கு இறைவன் திருக்கோலக் காட்சி கிடைத்த இடம் அச்சஞ்சிவி மலைப்பகுதி என்பர்! ஆ! அதுதான் எவ்வளவு அருமையான நிறைவான அருட்சாரல்! நுண்ணிய உண்மைகள் நிறைந்த அருட்சூழல்!

84. மலைவலப்பாதை, பொருளுலகப் பருமையிலிருந்து மேல் நோக்கும் உணர்வமைக்கின்றது; மலைப் பாரிசங்கள், கலையுலக உலாவலிலிருந்து மேன்மேல் நுண்கலை ஏறி ஒருமையுறும் வேதப்பயிற்சியையும், அதன் முடிநிலை வளர்ச்சியையும் விளக்கின்றது. மலையுச்சிக்குமேல் விளங்கும் கடவுட் காட்சி, அப்பயிற்சியின் பயனை நல்குகின்றது!

பழனியாண்டவர் மயில்விடுதூது

(மார்கழி மீ தொடர்ச்சி)

T. H. விவேகானந்தம்பிள்ளை B. A. L. T.,
(இறைபணியாளர், திருவெண்காடு தேவஸ்தானம்.)

கலாபமயிலின் பல பெயர்ப் பெருமை:—

அடியேன் துயரை ஆண்டவன்பால் எடுத்துச் சொல்ல, தூதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட களிமயிலின் பல பெயர்ப் பெருமையைக் கேளுங்கள். களிமயிலின் மாதர் நடைகற்ற **மயூரம்.** முகில் கண்டு,உவகை பூத்துத்

**நினது தாளை நாள்தோறும் மனதில் ஆசைவிடாக்
நினைவு மாறு நீமேவி யருள்வாயே.**

தழைபரப்பி, செம்மை, பொன்மை, பசுமை முதலிய ஒளி வீசி, வானகந்தழுவி, ஓங்குமரன் மேலிருக்க உற்றழகு தாங்கும் **நவிரம்** (மலை) நீ. நெய்யும் நறும் பூவுமின்றி தவிராதழகு தழைகின்ற கூந்தலே! அவிரும் **சிகாவளமே!** (நெருப்பு) சிகையின் வளமிருந்தது சிகாவளம். சிகை—கூந்தல். ஆண்மை சிதையாச் **சிகண்டியே!** (சிகண்டி—பேடி) சுகாரம்பமாமினிய **தோகாய்!** சேர்ந்தாரைக் கொல்லாது, தீப்புகையுமேவாது, சார்ந்தாரைக் காத்தளிக்கும் தண் **சிகியே.** (சிகி—நெருப்பு) சிகியையுடையது சிகி. நரம்புக் கட்டில் அடங்காத **கேதாரமே!** (பண்) வேலின் மின்னல் எழ, சேவலின் இடியோசை முழங்க, இதயமாகிய வானத்திலே, கந்தனுகிய மேகம், உரிய காலத்திலே பெய்வதனால் பல்லுயிராகிய பயிர்கள், தழைவதற்கு ஆதாரமாகிய **கேதாரமே.** (வயல்) (கேதாரம்—பண்; வயல்; மயில்) இரங்கத்தகுந்த நான் தேடுகின்ற பெருந்துணேயே.

மயிலுக்கமைந்த வேறு பெயர்களாய, சிகாவளம், சிகண்டி, சிகி, கேதாரம் முதலியன பல பொருள் ஒரு சொல் என்பதை ஆசிரியர், கவியரசு கு. நடேச கவுண்டரவர்கள் விளக்கும் முறை, பக்தர்கள் உள்ளத்தைப் பரவசப்படுத்துமென்பது துணிபு.

ஏனையதூதுக் கிவையிவை குறையெனல்:—

தூதுக்கேற்ற **நெஞ்சத்தை** தூதுவிடவென்னில், அது வஞ்சத்தில் தேர்ந்தது. முருகன்பால் கொஞ்சத்தில் சேராது. சேர்ந்தாலும் என் நிலைமையை ஓர்ந்து உரையாது. அன்றியும், கந்தன் உருவைக் காணில், கரைந்து, அழிந்து தன்னிலைமை கெட்டு, மறந்து, என் குறையைச் சொல்லாது.

கனக மியற்றித் தீர்ந்து துவளு மெனைச் சற்றறிந்து
கவலை யொழிதற் கிரங்கி யருள்வாயே.

முன்பு பலதடவை சொல்லியும் கேளாமல், அப்பணியைக் கைவிட்டது. பேய்போன்ற ஐம்பொறிகளின் மயக்கால் வலிமையிழந்து, புன்செயலிற் பொழுது போக்கிற்று.

அன்றிலினை ஏவுவோம் எனில், அது, தன் பெயர்கொண்ட மலையை முருகன் எறிந்தான் என்பதை அறிந்து அஞ்சாதோ? அன்றியும் அது புள் இனத்தைச் சேர்ந்து புணர்ச்சிக்கே உள்ளழிவது. ஆண்டவன்முன் செலுத்தத்தக்கதன்று. (அன்றிற் பறவையை 'கிரவுஞ்சபக்ஷி' என்று வடமொழியில் சொல்லுவர். ஆணும் பெண்ணும் சதா ஜோடியாகத்தானிருக்கும். பெரும்பாலும் பனைமரத்தில் வாசம் செய்யும். திருப்பனந்தாளில் இன்றும் இப்பறவைகளை மிகுதியாகக் காணலாம்.)

அன்னத்தை ஏவுவோம் எனில், தன்னையுடைய பிரமன், முன் முருகனாற் சிறைப்பட்டதை நினைந்து, அவன் திருமுன் செல்லாது. அன்றியும் அவ்வெள்ளையோ, பெருமான் முன் சென்றுணர்ந்து பேசாது.

கிளியை அனுப்பலாம் என்றால் 'பூசை' எனக்கேட்டால் உயிர் விடும் இயல்புடையது. (பூசை—பூனை) பூசை மிகுந்த கோயிலினுள் அது எவ்வாறு செல்லும்? வண்ணப் பாவில் வல்ல கிளியை, இறைவன் மலர்க்கையில் கண்டு, அதன் முன் நண்ணுவதற்கு நாணாதோ? மேலும், செல்லும் வழியில் அது பல தத்தை (கண்டம்) அடையும். திரும்பி வருவது அரிது. அதனால் கிள்ளையை (கிளி) **தத்தை** என்றழைப்பர்.

நாகணவாய் தன்னை விடின், (பூவை) அது பாகு போன்ற சொல்லுடைய பாவையர் கையில் பட்டுவிடுமே.

வேதகீத போத மோன மெய்ஞான நந்த
மூர்த்திடின்ப முந்தி யொன்று தந்திடாயோ.

புறாவை விடுவோமெனில், அதுவோ தானையே (கல்) உண்பது. காரியத்தில் தீது விளைவிக்கும். அன்றியும் அது கபோதி. (கபோதகம்—புறா) குயிலைப் போக்குவோம் எனில், தாயும் செவிலியும் கேட்டுப் பொறுக்க முடியாத அதன் கூக்குரலை யார்தான் கேட்டு மகிழ்வார்? அன்றியும் சிவபெருமானால் முனியப்பட்டு, உடம்பு பின்னப்பட்ட மன்மதன் முன் பிடிபட்டுச் சின்னப்பட்டு, முருகனது சினத்திற்பட்ட மாமரத்திலே பின்னப்பட்ட அக்குயில், ஆண்டவன் முன் போய்ப் பேசுவது எங்ஙனம்?

வண்டினையும், மானினையும் வள்ளற்பால் செல்க வெனின், அவை வேங்கையுரு ஆனவன் முன் செல்பவோ? தமிழையும் பொன்னையும் செப்பிவிடுவோம் என்றால் அவற்றின் உரையையும் பிறரே சொல்ல வேண்டியிருக்கின்றன. (உரை—பொருள்; மதிப்பு) அன்றியும் அவை பல பந்தப் படலும் உடையவை. எம உரையை அவை எவ்வாறு இயம்புவ? அவை சந்தம் உடையவை ஆயினும், பல வேற்றுமையும், அல் வழியும், திரிபும் உடையனவே. தென்றலோ என்றால் உன் எச்சிலாகிய பாம்பின் வாய் எச்சில் அது. (மயிலின் வாயில் பாம்புளது. பாம்பு அரியுண்ணும்)

ஆதலின் நாயகன் முன் அதனை உய்த்தல் நன்றன்று. மேகத்தைத் தூண்டுவோம் எனில், அது இடிக்குரலும், உடற்கருப்பும், வாய் திறந்தால் நெருப்புக் கக்குதலும் உடையன. காலம் அறியாதது. விரலியைத் தூது விடுவோம் எனில், கள்ளும், ஊனும், விரும்பியுண்ணும் பேதையரை வள்ளல்பால் விடுதல் மாண்பன்று. இவை யெல்லாம் தூதுக்குத் தக்கவையல்ல,

---

பரமகுரு அருள் நினைந்திட் டுணர்வாலே
பரவுதரி சனையை என்றெற் கருள்வாயே.

ஏனைய தூதுக்கிவையிலை குறையென எடுத்தியம்பும் பகுதி, ஆசிரியரவர்களின் சிரிய புலமையையும், தெள்ளிய உள்ளத்தையும், சமய ஆராய்ச்சித் திறனையும், விவகார சமத்காரத்தையும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கு கிறதை வாசகர்கள் கண்ணுறுவார்களென்பது ஒருதலே.

மயிலின் தூதே வாய்ப்பு உடைத்து என்றல்:—

தூதுவருக்கு இன்றியமையாதனவாகிய திடம், அறிவு, கண்ணோட்டம், அழகு, திறமை இவைபோன்றன எல்லாம், மயிலே! உன்பால் கூடியுள்ளன முருகன் உன்மேல் ஏறி அமரும் குறிப்பு, ஏவும் சொல்லின் குறிப்பு, அவன் திருவடி அவ்வப்போது உன்மேல் பொருந்தும் நிலைமை, இவைபோன்றவையறிந்து, அவன் திரு உள்ளத்துக்கு ஏற்றபடி நடக்கும் இயல்புடையை நீ. குமரனும் உன்னுடைய குறிப்பையறிந்து அருள்வான். இறைவன் தயவினும் அடியார் தயவே சிறந்ததென்று கூறுவர்.

சற்குருநாதர் வணக்கம்:—

"தஞ்சமென வஞ்சாலனுஞ்சாது குருநாதனிரு
செஞ்சரண நெஞ்சதனில் சேர்தலினுல்—விஞ்சும்
அயில்விடலை தென்பழனியாண்டவன்பாலன்பாய்
மயில் மயில்விடுதூதாகு மகிழ்ந்து." (தொடரும்)

கந்தர் கலிவெண்பா

(ரசபதி)

ஆறிரு தோள்களின் அருள்நலம்

பகை யழிப்போன்; வினை ஒழிப்போன்; கலை முடிப்போன்; இன்பளிப்போன்; வரம் கொடுப்போன் இந்த வரதன் என்பதை யறிவிக்கும் அற்புத அறுமுகங்களுடன்

அசட அநாசாரனை அவலனை ஆபாசனை
அடியவரோடு ஆள்வதும் ஒருநாளே.

அமைந்து, கந்தப் பரமன் திருக்கரங்களும் தமது கருணை மலர்ச்சியைக் காட்டுகின்றன.

காணத்தக்க போக அடையாளம் கடப்பமலர் மாலை; குறைவிலாத யோகசின்னம் குராமலர் மாலை. போகம் விழைவிக்கும் மோக தாகனுகளின், சுப்பிரமண்யப் பரமன் சூடியிருப்பது கடப்பமலர்மாலை. ஞான யோகத்தை உப தேசிக்கும் மோனதாதா ஆகலின், குமரன் தோள்களில் குராமலர் மாலையும் குலவுகின்றது. பயனுன மாலைகள் அணிந்த தோள்கள் பன்னிரண்டும், தம் கம்பீரம்தோன்ற, நிமிர்ந்து மலைகள் போல நிற்கின்றன. இதோ பாருங்கள்!

'கொந்தவிழ்ந்த
வேரிக் கடம்பும்; விரைக்குரவும் பூத்தலர்ந்த
பாரப் புயசயிலம் பன்னிரண்டும்

(கொந்து அவிழ்ந்த - கொத்துக் கொத்தாக மலர்ந்த. வேரி - தேன். விரை - மணம். பூத்து அலர்ந்த - மலர்ந்து விளங்கிய. பாரம் - மகிமாதிசயம். புயசயிலம் - தோள் மலைகள்; உருவகம்.)

தோள்கள் மலைகள்போல் தோன்றுகின்றனவாம். அத் தோள்களில் சூடிய மாலைகள், அம்மலைகளில் அடர்ந்த மலர்கள் போலவே காட்சியாகின்றனவாம். கொத்துக் கொத்தாக மலர்ந்த கடப்ப மலர்களில், தேன் அதிகமாம். மலர்ந்து விளங்கும் குராமலர்கள், மிகுதியாக மணம் வீசு கின்றனவாம். அற்புதம் அற்புதமாக இருக்கின்றன அந்த தோள்களின் செயல் என்று பழுத்த அன்போடு பாடுகின் றார் குமரகுருபரர். இவைகளை,

'மூவிரு முகனும் முறைநவின் றேமுகலின்
ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பில்

அருளை வளம் பத்திக்கும் இறைவனே
மயிலினில் வந்து முத்தி தரவேணும்.

'செம்பொறி வாங்கிய மொய்ம்பில் சுடர்விடு
வண்புகழ் நிறைந்த வசிந்துவாங்கு நிமிர்தோள்'

என்று நலம்தோன்ற நவின்றுளர் நக்கீரர்.

ஊட்டும் கை

பாவ அசுரரைப் பாச இருள் என்பர் மேலோர். அந்த அசுர ஆக்கிரமிப்பால், பதவி யிழந்து, வயிறு காய்ந்து வருந்தலாயினர் வானவர். கூடிக் கூடிக் குமுறியழும் அவர்கள் எதிரில், விமலன் அருள் ஒளி வெளிப்படுகின்றது. அந்த ஒளியின் எதிரில், அசுர இருள்முழுதும் அழிந்தொழிகின்றது. அந்தப் 'பாச இருள் துரந்து பல்கதிரில் சோதிவிடும்' திருமுகத்திற்கு இணையாக அமைந்த திருக்கரங்கள் இரண்டு. அவற்றுள், அசுர ஆட்சியில் இழந்த அமுதத்தை வானவர் மகிழ வழங்குகின்றது வலது கரம்; அதற்கு நேரான இடது திருக்கரத்தை, இடையில் ஊன்றியுளன் இறைவன்.

'ஆரமுதம்
தேவர்க்கு உதவும் திருக்கரமும்,
'வாம மருங்கில் ஒருகரமும்'

(ஆர்-நிறைவு அல்லது அருமையான. வாமமருங்கு - இடப்பாக இடை)

என்ன ஆனந்தமாக இருக்கின்றது இச்செய்தி! ஊன்றி யிதைப்படிக்கும்போது, அமரர்க்கு அமுதூட்டிய அந்த நிமல கரத்தை நினைந்து நம் வாயும் ஊறுகின்றது!

'விண்செலன் மரபின் ஐயர்க்கு ஏந்தியது ஒருகை;
உக்கம் சேர்த்தியது ஒருகை'

அமரர் சிறை மீளவிட்ட பெருமானே
மயிலின் மீசையேறி நித்தம் வரவேணும்.

என்று இச்செய்தியை நமக்குப் பல காலத்திற்கு முன்னரேயே நினைவூட்டியுளர் நக்கீரர். ஆனால், ஐயர் என்பதற்கு முனிவர் என்று கொண்டு, நயமாக வேறு ஒரு பொருள் செய்கின்றார் நச்சினார்க்கினியர்.

அணைக்கும் கை

அக ஒழுக்கத்திற்குப் புறம்பாகி, சில சமயங்களில் அறநெறி தவறுவர் ஆடவர். அவர்கட்குத் தம்பால் அச்சம் பிறப்பிக்கும் கற்பிற் சிறந்தவர் தெய்வ அரிவையர்; இதனால், அவர்கட்குச் சூர்மகளிர் என்ற பெயர் சூட்டியுளர் முன்னோர். முருகன்மேல் காதல் முதிர்ந்தவர் அம் மாதர். அவர்தம் அகமுகமான வேட்கை கண்டு வெளி வருகின்றான் விமலன். 'போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கும் மோகம் அளிக்கும் திருமுகம்' முன் நிற்கின்றது. இனிய அத் திருமுகத்தோடு சேர்ந்த கரங்கள் இரண்டு. அவற்றுள், விஞ்சிய வேட்கை அம் மெல்லியலார்தம் அன்பிற்கு உருகி, அவர்கட்கு மணமாலை சூட்டி அருள் புரிகின்றது வலக்கரம். இப்பகுதியைப் படிக்கின்றபோதே நம் உள்ளம் துடிக்கின்றதுவே.

விரும்பினார் நிலைகண்டு, குழைந்து அணைத்து, மாலை புனையும் கரதலம் நினைந்து, கண்ணும் கருத்தும் என்று அப்பேறு நமக்கு என்று ஏங்குகின்றன அல்லவா!

மழை தரு கை

வானோர் மாபெரும் இல்லறம் வழுவற நடைபெற, நிலவுலக இன்பம் நிலைபெறுகின்றது. வயிற்றுப் பசி யகல, அறம் வளர, பொருள் பெருக, இன்பம் தழைக்க, இறை வழிபாடு நேர, பாரோர்க்கு விளைய வேண்டும் பயிர்.

அருணை நகர்தனி லழகுடன் வருவிய பெருமாளே
பவனி தனையது நினைத்தினை யென அருள் பகர்வாயே.

பயிர்க்கு இன்றியமையாதது மழை. காலம் தவறாமல் பெருகும் தன் கருணையை நினைவுறுத்த, வளம் குன்றாத மழையை வருஷிக்கின்றது இடது திருக்கரம்.

'சூர்மகளிர்
மேவக் குழைந்தணிந்த மென்கரமும்—ஓவாது
மாரி பொழிந்த மலர்க்கரமும்'

(சூர்மகளிர் - தேவமகளிர். மேவ - விரும்பியடைய. குழைந்தணிந்த - இரக்கம் கொண்டு சமீபித்த; அல்லது மாலை சூட்டிய. ஓவாது - இடையறாது. மாரிபொழிந்த மலர்க்கரம் - மலரிலிருந்து பெருகும் தேன்போல, உயிர்கள் உய்தியடைய கரத்திலிருந்து பெருகும் வளம் நிறை மழை பொழிந்த.)

விண்ணிற்கும் மண்ணிற்கும் பயன் செய்யும் இந்த விமல கரங்களை நினைந்து நெகிழ்ந்து,

'ஒருகை
வானர மகளிர்க்கு வதுவை சூட்ட; ஒருகை
நீல்நிற விசும்பின் மலிதுளி பொழிய'

என்று பாடுகின்றார் சங்கத்தமிழ்த் தலைவர்.

கதி காட்டும் கை.

அறிவிற் செறிந்து கலை நுட்பங்களை அறிவிக்கும் முருகன் திருமுகத்தொடு அமைந்த கரங்கள் இரண்டு. அவற்றுள் இடதுகரம் மார்பின் மாலையொடு ஒன்றியுளது. வலக்கரம் திருமார்பொடு சேர்ந்து, மோனஞான முத்திரையை உயிர்கட்கு நினைவுறுத்துகின்றது. இங்ஙனம் மோனநிலையில் முதல்வன் இருப்ப, பரம இன்ப ஒளி உயிருணர்வில் பாய்கிறது.

அறிவை யறிவது பொருளென அருளிய பெருமானே
கமல மலரடி கனவிலு நனவிலு மறவேனே.

‘தன்னந் தனிநின் றதுதா னறிய
இன்னம் ஒருவர்க் கிசைவிப் பதுவோ’

என்று அருணையர் அநுபவிக்கும் இந்த திவ்விய திருவுருவை

‘பூந்தொடையல்
சேர அணிந்த திருக்கரமும்—மார்பகத்தில்
வைத்த கரதலமும்’

காண்பீர்கள் என்று கனிந்து காட்டுகின்றார் நம் கவிவரர்.

‘ஒருகை
மார்போடு விளங்க; ஒருகை
தாரோடு பொலிய’

என்று இக்கோலத்தைப் படமெழுதி காட்டுகின்றது திருமுருகாற்றுப்படை.

கரி செலுத்தும் கை.

அற்புத திருவடிகளை நினைப்பர்; அகம் மிகமகிழ்வர்; அந்த அடியவர்கட்கு அளவிலாத வரங்களை அளிக்கும் திருமுகம் ஒன்று; அம்முகத்தொடு இயைந்த கரங்கள் இரண்டு.

பிணிமுகம் என்னும் யானைமேல், அடியவர்கட்கு வரம் பல வழங்கப் பெருமான் வருவான். யானை செலுத்தும் கோலத்தில், அங்குசம் ஏற்றுகிறது வலது கரம்; அதற்கு இணையானகரம் இடது தொடைமேல் இருக்கின்றது.

‘உய்த்த குறங்கில் ஒருகரமும்
‘கறுவுசமர் அங்குசம் சேர் கையும்’

(உய்த்த - எடுப்பான. குறங்கில் - தொடையில். கறுவு சமர்-பல்கடித்துப் பகைத்துரைக்கும்மும்மரமானபோரில்.)

பகையை அடக்கவும், அடியரை மடக்கும் ஆணவக் கரியை அடக்கவும் பயன்படும் அங்குசம். இவைகளை

மயிலேறி யன்று நொடிபோதி லண்டம் வலமாக வந்த குமரேசா.
தேவியமோ கூத்தையென்று அருள்வாயே.

யெல்லாம் உணர்ந்தே 'கறுவு சமர்' எனப்பெறுகிறது போலும்.

அங்குசத்தையும் பாய்ச்சும் நிலைக்கு ஏற்ப, இடக்கை ஊன்றிய இடதுதொடை விம்மியெழுதலை குமரகுருபரர் 'உய்ந்த குறங்கு' என்கிறார்.

'குரங்கில் உய்த்த ஒருகரமும்' என்று இயைத்துப் பொருள்கொள்ளுதல் அத்துணைச் சிறப்பிலது என்பது, இங்கு உய்த்து உணரத் தகுவது. இதனை,

'நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇய
தோருகை அங்குசம் கடாவ ஒருகை'

என்று உணர்ந்து உருகுகிறார் நக்கீரர்.

துடிமுழக்கும் கை.
மணி அடிக்கும் கை.

அசுர ஆட்சியை அடக்கிய வீரவிலாசத்தோடு, கன வேள்வியை நடத்துபவன் கந்தப் பெருமான். அவ்வமயம் நிகழ்த்தும் குடைக் கூத்தும், துடிக் கூத்தும் குமரனுக்கே உரியன. ர ர ர ர ர ர எனும் ஒலி, குடைக்கூத்தில் எழும்; டு டு டு டு டு டு எனும் ஓசை, துடிக்கூத்தில் தொனிக்கும்.

''வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூரனைத்தடிந்து தெவ்வர் உயிர் சிந்தும்'' திருமுகத்திற்கு உரிய கரங்கள் இரண்டு. அவற்றுள் ஒன்று, உடுக்கை ஒலி எழுப்பும்; அவ்வோசைகள் வேள்வி நடத்த இடும் கட்டளை; மற்றொரு கரம், வீரகண்டாமணி ஒலியெழுப்பி, அவ்வேள்வி வழிபாட்டை எவர்க்கும் நினைவூட்டும். இதனை நம் முனிவர் ஓரேஅடியில் குறிப்பிடும் அழகே ஒருதனி.

'சிறுதுடிசேர் கையும்மணி சேர்ந்ததடம் கையும்'

நித்தநினை தாளில் வைத்ததொரு காதல்
நிற்கும் வகை யோத நினைவாயே.

(துடி - உடுக்கை. தடம் - நெடி துநீண்ட.)

வீரவிஜயம் செய்யும் இத் திருக்கரங்களை

'ஒருகை-

'கீழ்வீழ் தொடியோடு மீமிசை கோட்ப; ஒருகை
பாடின் படமெணி யிரட்ட'

என்று பாடுகின்றார் கீரனார். குமரகுருபரர் நோக்கில் 'துடி;' நக்கீரர் நோக்கில் 'தொடி;' இங்கு இவ்வளவே வேற்றுமை.

கேடயம் சுழற்றும் கை
வாள் அசைக்கும் கை

'தந்தைக்கு முன்னம் தனிஞான வாள் ஒன்று சாதித்தருள்
கந்தச் சுவாமி எனைத் தேற்றிய பின்னர்க்காலன் வெம்பி
வந்திப் பொழுதென்னை என்செய்யலாம்; சக்திவாள் ஒன்றி
சிந்தத் துணிப்பன் தணிப்பரும் கோபத்திசூலத்தையே' [றால்

என்று இறுமாந் திருப்பவர் அடியார்கள். அவர்கள் தம் ஊழ்வினையைப் போக்கி உலவாத பேரின்ப வாழ்வு தரும் செய்யமலர் முகத்துடன் இணைந்த கரங்கள் இரண்டு. அவற்றுள், அசுர உணர்வு அடியரைத் தாக்கா வண்ணம், கேடயத்தை என்றும் சுழற்றியபடியே யிருக்கின்றது இடதுகரம். மற்றொன்று வாளபடையை வலம் சுழற்றிக் கொண்டே இருக்கின்றது.

அதிர் கேடயம் சுழற்றும் அம்கைத்தலமும்
கதிர்வாள் விதிர்க்கும் கரமும்

என்று பாடுவார் நம் முனிவர்.

இதனை,

'ஐயிரு வட்டமொரு, எஃகு வலம்திரிப்ப'

என்று கூறி அநுபவிக்கின்றார் கீரனார்.

சுப்பரம்மண்யோம் என்று ஆகுதி யளிக்கும் அந்தணர் வேள்வியை அழிக்காதபடி காப்பளிக்கின்றன என்று

இங்கு உரை காண்கின்றார், உச்சிமேல் புலவர்கொள் நச்சினார்க்கினியர்.

அன்பிற் கிளர்ந்து ஆற்றொழுக்காக வரும் பாடல் முழுதும் இனி படித்துப் பாருங்கள்.

"கொந்தவிழ்ந்த
வேரிக் கடம்பும், விரைக்குரவும் பூத்தலர்ந்த
பாரப் புயசயிலம் பன்னிரண்டும்—ஆரமுதம்
தேவர்க் குதவும் திருக்கரமும், சூர்மகளிர்
மேவக் குழைந்தணிந்த மென்கரமும்,—ஓவாது
மாரி பொழிந்த வலர்க்கரமும், பூந்தொடையல்
சேர அணிந்த திருக்கரமும்—மார்பகத்தில்
வைத்த கரதலமும், வாமமருங் கிற்கரமும்,
உய்த்த குறங்கில் ஒருகரமும்,—மொய்த்த
சிறுதுடிசேர் கையும்மணி சேர்ந்ததடம் கையும்,
கறுவுசமர் அங்குசம்சேர் கையும்தெறுபோர்
அதிர்கே டயம்சுழற்றும் அங்கைத் தலமும்
கதிர்வாள் விதிர்க்கும் கரமும்'

என்று இவைகளை நாம் ஓயாது பாடிப் பாடி, உள்ளம் பாகாய் உருகும்படி, பன்னிரு கரங்களும் தம் அற்புத செயல்களைச் செய்கின்றன. இன்னும் செய்து கொண்டேயிருக்கின்றன.

என்ன வியப்பு! இவைகளைச் சேவிக்கும் ஆன்ம உணர்விற்கு இன்னும் சில அற்புதங்கள் தரிசனமாகின்றன; அவைகளை அடுத்த இதழிற் காண்பம்!

The Find

God has been discovered. The Holy Quest never goes in vain. But there is one difference between the God discovered and other discoveries. The benefit of the discovery and its blessing are confined to those who have made the Holy Quest. Unto those who have made the Quest, God discovers Himself. But, to those who do not set about the Quest, God is still the Secret of all Secrets-a sealed book - a magnificent treasure encased within the hard encrustation of the "I" and "MINE." God is the idea into which all ideas merge. God is the force which

generates all forces known and unknown. God is Form and the Non - Form into which all forms dissolve in the ultimate. God is the Absolute Knowledge which is the goal of Relative Knowledge nay the very foundation of it. He is the one Self of the Selves of Existence. He is the longing of the Soul and its realisation. He is the very life of living things and the infinitude of diverse matter. He is the Symphony of Creation. He is Destruction which aids the unfolding of fresh life. He is Music; He is Poesy. He is Ecstacy - the joy of life and the treasure of those who can get into tune. The recorded experiences of the Holy Quest inspire the failing heart with fresh energy and instructs into the true path and the glory of the Find. The Vedas went in search of God and desired to find one where He resides. *Esavasya Upanishad* declared tht results.

"Isavasyam itham sarvam."

God lives in all things. Does He! Then He lives in my body and the body of every one of the creatures ni creation. The great auther of *Tiruppugazh* says:

பேத அபேதமொடு உலகாய் வளர்வது
ஒன்று.......அது நீயே.

"with the interpenetration of separateness and unity, Thou hast grown into the worlds - Thou the one Existence." Sri *Sundaramurthi Swamigal* in the opening Thevaram, declares

"ஊனாய் உயிரானாய் உடலானாய் உலகானாய்"

"The flesh, the life, the body and the cosmos are of Thyself." The Great *Pattinathar* in his work *Poornamalai* says:

"ஊனுக்குள் நீ நின்று உலவினதைக் காணாமல்
நானென்றிருந்து நலமழிந்தேன் பூரணமே."

"without realising that Thou art the pervading life of this body. I foolishly thought that it was "I" and hence came to grief O 'Lord'."

Saint Appear describes the God as the Fullness that pervades the creation and makes it:

"இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமானனாய் எறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி
ஆகாசமாய் அட்ட மூர்த்தியாகிப்
பெண்ணாகி, ஆணாகி பிறருருவும் தம்முருவும் தாமே
நெருநலையாய் இன்றாகி நாளையாகி [யாகி
சென்றடிகள் நின்றவாறே"

The Lord is discovered in creation. He abides in the five Elements, the Ejamanan and the Eight Murties of our Vedas. He is the sun and the moon. He is the male and the female in creation. His own form is Himself and even so the form of the multitudinous lives in creation. He is the present. past and future. *Saint Appar* in *Tiruthandakam* of rare import says:

"நீராகி நிழலாகி நீள்விசும்பின் உச்சியாகி
பேராகிப் பேருக்கோர் பெருமையாகி
யாரேனும் தன்னடைந்தார் தம்மையெலாம்
ஆட்கொள்ள வல்லவேதம் ஈசனார் தாம்
பாராகிப் பண்ணாகிப் பாடலாகிப்
பரஞ்சுடராய்ச் சென்றடிகள் நின்றவாறே."

The ultimate resolution of things - the Holy Ashes art Thou. Thou the healing Shade for the burning sense of separatism. Thou art the highest altitude of perfection. All name, reputation and glory art Thou! Thy grace embraces all, whoever they may be, that care to seek for it. One can see the Divine Form in the world of Thy Creation, in the Muse of Thy Song and in the Effulgence of the Sun, Moon and the Stars. A passage that seems to conclude the Quest of Saint Appar is very instructive:

"தேடிக் கண்டுகொண்டேன் - திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுளே
தேடிக் கண்டுகொண்டேன்."

"What Brahma and Vishnu searched for *without* and could not encompass, I have *discovered within* myself.

(*Thiruppugal Mani*)

439

'பாலிற் சுவைபோலும்
பழத்தின் மதுபோலும்
நூலிற் பொருள்போலும்
நுண்பொருளைப் போற்றிடு'
(இடைக்காட்டுச் சித்தர்)

ஆயுர்வேத வித்வான் B.V. பண்டிட்ஸ்
'சத்வைத்யசாலே' நஞ்சன்கூடு

I.D.L.21 ஸ்வாஸ்கோ இருமல், காசம் சுவாசவியாதிக்கு
I.D.L.72 ஹார்டோன் ஹ்ருதயவலி, மயக்கம், துடிப்புக்கு
I.D.L.75 டிப்சன் ஜீரண உபாதைக்கு
I.D.L.99 ஜ்வரேக் எவ்வித ஜ்வரங்களுக்கும்

I.D.L.71 பிமெலெக்ஸ் ரக்த, பல விருத்திக்கு
I.D.L.97 ஹிஸ்மெரு பலஹீனம் மயக்கத்திற்கு
I.D.L.81 ப்ரதமென்ஸ் ருதக உபாதைக்கு
I.D.L.91 யூடிரூல் கெர்ப்பாசய டானிக்
I.D.L.96 டோனடெல் ஜீர்ண விருத்திக்கு

I.D.L.12 காஸ்மஸ் கஸதூரி மாத்திரை
I.D.L.18 கர்ஜன் கோரோஜன மாத்திரை
I.D.L.15 பாலக்ஸ் பேதியாக மாத்திரை
I.D.L.31 சீசுராக் ஜீர்ண டானிக்

அவசிய தின உதவிகள்
"நஞ்சன்கூடு பல்பொடி" I.D.L.61 (மெடிகேடட்)
பயோரியா, மற்ற பல் உபாதைகளுக்கு
I.D.L.78 கூலெக்ஸ் உஷ்ண, சமன தைலம்
I.D.L.55 ஜிஞ்சிப் அஜீர்ண, பித்த சமனி
'யூனிகான்' சுத்த தேன்

யுனைடெட் கன்ஸர்ன்
54. பந்தர் தெரு :: மதராஸ்.1

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
பீடீ
நெ. 1506

ஷண்முகம் பிராண்டு
ஸ்டீல் டிரங்கு & சூட் கேஸ்கள்

நூதன முறைகளில் நீடித்த
உழைப்பிற்காக

உறுதியானதும் உத்திரவாதமுமான
சரக்குகள்.

சி. ஞானசுந்தர நாயகர்
341, எஸ்பிளனேட், சென்னை—1.
ஷோ ரூம் : 1-14, பேக்கர் தெரு,
சென்னை-1

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்பு பெற்ற
நகை வியாபாரிகள்
"ஸ்வர்ண மாளிகை"
A. S. S. M. சோமசுந்தர செட்டியார் & Co,
தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூல வீதி - மதுரை.
Tel :—"FAITH' Estd :—1924 Phone :—113

வியாபாரக்குறி
N. K. M.
தங்கநாடா
நம் நாட்டுத் தொழில்களில்
சிறப்புவாய்ந்த கைத்தறியால்
சிறந்த நூதன முறைகளில்
தயாரிக்கப்பட்ட
பட்டு. நூல் ஜவுளிகளுக்கு
நம்பிக்கையான இடம்.



கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
மொத்தம் அண்டு சில்லரை வியாபாரம்,
53. கிடங்குத் தெரு, மதராஸ் 1.

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road Madras—18
Edited & Published by S. Muthuswamy, 54 ,Bunder St., Madras.